முன்னால் சென்ற வாகனம் திடீரென்று நின்றதால்

திருச்சி விமான நிலைய சுற்றுச்சுவரில் மோதி ஓடுதளம் பகுதியில் புகுந்த லாரி

அதிகாலை நேரமாக இருந்ததால் பெரும் விபத்து தவிர்ப்பு

திருச்சி, அக்.22–

திருச்சி விமான நிலையத்தையொட்டி திருச்சி– புதுக்கோட்டை சாலை அமைந்துள்ளது. வழக்கமாக இந்த இந்த சாலையில் அதிக அளவில் போக்குவரத்து இருக்கும். குறிப்பாக அறந்தாங்கி, ராமநாதபுரம், சிவகங்கை, காரைக்குடி உள்ளிட்ட ஊர்களுக்கு பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து வாகனங்கள் அதிக அளவில் சென்று வருகின்றன.

புதுக்கோட்டை சாலை

இதற்கிடையே பல்வேறு விமான நிலைய ஆணையக் குழு கூட்டங்களில் திருச்சி விமான நிலைய ஓடுதளத்திற்கு அருகில் இந்த சாலை அமைந்துள்ளதால் அதிக அளவில் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனவே இதனை மாற்றியமைப்பதற்கான வழிவகைகள் இந்த கூட்டங்களில் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கடந்த சில கூட்டங்களில் இப்பகுதிகளில் விபத்துக்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற் காக கீழ்தள சாலை அமைப்பதற்கான வழி வகைகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என விவாதிக்கப்பட்டது.

மேலும் சாலையை ஒட்டிய பகுதியில் உள்ள ஓடுதளத்திலிருந்து விமானங்கள் அதிக அளவில் மேலே பறக்கிறது. எனவே இந்த பாதுகாப்பினை அதிகப்படுத்த வேண்டும் எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு இருந்தது. மேலும் தற்போது விமான நிலைய விரிவாக்க பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

காய்கறி லாரி

இந்த நிலையில் இன்று அதிகாலை சுமார் 3.50 மணிக்கு ஒதூரில் இருந்து காய்கறிகளை ஏற்றிக் கொண்டு லாரி ஒன்று அறந்தாங்கி நோக்கி சென்றது. இதனை புதுக் கோட்டையைச் சேர்ந்த செந்தில்குமார் (வயது 36) என்பவர் ஓட்டி சென்றார்.

இன்று அதிகாலை திருச்சி விமான நிலைய சுற்றுச்சுவரை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்த லாரி.

இந்த லாரி திருச்சி விமான நிலைய சுற்றுச் சுவர் அருகில் வந்து கொண்டிருந்த போது முன்னே சென்ற வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அந்த வாகனம் மீது மோதாமல் இருப்பதற்காக டிரைவர் செந்தில்குமார் சாலையின் இடதுபக்கம் திருப்பினார்.

விமான நிலைய சுவரில் மோதியது

இதில் கட்டுப்பாட்டை இழந்த லாரி தாறுமாறாக ஓடி அருகில் இருந்த விமான நிலையத்தின் சுற்றுச் சுவரை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தது. சிறிது தூரம் இழுத்து செல்லப்பட்ட அந்த லாரி விமான நிலைய ஓடுதளத்திற்கு அருகில் சென்று நின்றது.

இதனை அறிந்த விமான நிலைய பாதுகாப்பு படை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு ஓடி வந்தனர். இந்த விபத்தில் லாரியை ஓட்டி வந்த செந்தில்குமார் எவ்வித காயமும் இன்றி உயிர் தப்பினார். விமானங்கள் தரையிறக்கப்படும் நிலையில் லாரி அங்கு நின்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக துரித கதியில் செயல்பட்ட மத்திய தொழில்பாதுகாப்பு படையினர் லாரியை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் லாரியை அகற்ற முடியவில்லை. இதையடுத்து கிரேன் கொண்டு வரப்பட்டு லாரி விமான நிலைய சுற்றுச்சுவரை விட்டு வெளியே கொண்டு வரப்பட்டது. அதிகாலை நேரமாக இருந்ததால் வாகன போக்குவரத்து குறைந்து பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திருச்சியில் இருந்து துபாய்க்கு புறப்பட்ட ஏர் ஏசியா விமானம் ஓடுதள பாதையில் இருந்து மேலே பறக்க முயன்ற போது விமான நிலைய சுற்றுச்சுவரை இடித்தோடு, அங்கிருந்த சிக்னல் கோபுரங்களையும் இடித்து தள்ளியது.

பெரும் விபத்து ஏற்படும் என்ற அச்சம் இருந்த நிலையில் பாதுகாப்பு கருதி அந்த விமானம் மும்பையில் அவசரமாக தரையிறக்கப்பட்டு பழுது நீக்கப்பட்ட பின்னர் துபாய்க்கு புறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திருச்சி விமான நிலையத்தின் சுற்றுச்சுவரில் மோதி உள்ளே புகுந்த லாரி ராட்சத கிரேன் மூலம் அகற்றப்படும் காட்சி.

நவம்பர் 2022 விலை ரூ.15

கோகுலம் கதிர்

தீபாவளிச் சிறப்பிதழ்

திருமண வாழ்வில் காதல் இன்பம்

ஷேஷோ கூறும் ரகசியம்

மழைக்கால நோய்கள் தடுக்கும் வைத்தியம்

ஆன்மிக களஞ்சியம்

'ஜோதிட ரத்னா' அஸ்ட்ரோ வெ. பழனியப்பன் கணிப்பில்

மாத ராசி பலன்

கணவன்-மனைவி ஒற்றுமையை அதிகரிக்கும்

கேதார கவுரி விரதம்

கேதார கவுரி விரதம் புரட்டாசி மாதத்தில் சுக்கில் பட்ஷ அஷ்டமியில் துவங்கி, ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தியில் முடிக்க வேண்டும். 21 நாட்கள் விரதம் இருக்க முடியாதவர்கள் கேதார கவுரி விரத நாளன்று ஒரு நாள் மட்டுமாவது விரதம் இருந்து, முழு பலனையும் பெற முடியும்.

கைலாயம் சென்ற பிருங்கி முனிவர் அம்பிகையை விடுத்து, சிவனை மட்டும் தனியாக வணங்கிச் சென்றார். இதனால் கோபமுற்ற பார்வதி தேவி, இமயமலை கேதாரப் பகுதியில் உள்ள கவுதம முனிவரின் ஆசிரமத்தில் சென்று தங்கினாள். அம்பிகையின் வருகை பற்றி கவுதம முனிவர் கேட்டறிந்து உள்ளார்.

சிவனின் உடலில் பாதியை பெறுவதற்காக தவம் செய்ய போவதாக கூறி உள்ளார்.

புராணங்கள், சாஸ்திரங்கள் போன்றவற்றை ஆராய்ந்து இமயமலையில் சுயம்புவாக எழுந்தருளிய கேதாரேஸ்வரரை வணங்கி விரதம் இருக்கும் முறைகளை அம்பிகைக்கு விளக்கினார். இதனை ஏற்று அம்பிகையும் 21 நாட்கள் விரதம் இருந்து, சிவனின் உடலில் பாதியை பெற்று, அர்த்தநாரீஸ்வரர் ரூபத்தை பெற்றார்.

அதோடு, இந்த விரதத்தை உலகில் யார் செய்தாலும் விரும்பிய அனைத்தையும் பெற வேண்டும் என சிவ பெருமானிடம் அம்பாள் கேட்டுக் கொண்டார். சிவ பெருமானும் அம்பிகையின் கோரிக்கையை ஏற்று, அப்படியே ஆகட்டும் என வரம் அளித்ததாக புராணங்கள் கூறுகின்றன.

சிவனுக்கு உரிய சிறந்த விரதங்கள் மற்றும் அஷ்ட விரதங்களில் கேதார கவுரி விரதமும் ஒன்று. அம்மன் மற்றும் சிவாலயங்களில் இந்த விரதம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. திருமணமான பெண்கள் தங்கள் மாங்கல்ய பலத்திற்காகவும், திருமணமாகாத பெண்கள் நல்ல திருமண வாழ்க்கை அமைவதற்காகவும் இந்த விரதம் இருக்கிறார்கள். பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் இந்த விரதம் அனுஷ்டிக்கலாம்.

கே.என்.சுந்தரராஜன் அய்யர்
ஆற்காடு. 92453 71802

இந்த ஆண்டு கேதார கவுரி விரதம் தீபாவளிக்கு மறு நாள் 25–ந் தேதி செவ்வாய்க்கிழமை வருகிறது. அன்று காலை 9 மணி முதல் 10.30 மணிவரை எமகண்டம் உள்ளது. இதே போல் மாலை 3 மணி முதல் 4.30 மணி வரை ராகு காலம் என்பதால் அன்று காலை 10.30 மணிக்கு மேல் 3 மணிக்குள் விரதத்தை முடித்து விட வேண்டும்.

இதற்கிடையில் சூரிய கிரகணம் வேறு வருகிறது. மாலை 5.14 மணி முதல் 6.10 மணி வரை கிரகணம் உச்சத்தில் இருக்கிறது. அதற்கு முன்பே நோன்பை முடித்து விடுவதால் கிரகணத்தால் நோன்பிற்கு எந்த பாதிப்பும் இல்லை.

அருகில் உள்ள கோவிலுக்கு சென்று பலகாரங்கள் அதிரசம் நைவேத்தியம் செய்து நோன்பு கயிரை எடுத்து வந்து கட்டி கொள்ள வேண்டும். பெண்கள் இடது புற கையிலும், ஆண்கள் வலதுபுற கையிலும் கட்ட வேண்டும்.

விரதம் இருக்கும் முறை

கேதார கவுரி விரதம் இருப்பவர்கள் அதிகாலை எழுந்து குளித்து விட்டு, மஞ்சள், சந்தனம் இவற்றில் ஏதாவது ஒன்றில் விநாயகர் பிடித்து வைத்து, அருகம்புல் வைத்து வழிபட வேண்டும். விநாயகரை வணங்கிய பிறகு, கலச பூஜை, அம்மா, அப்பா, குலதேவதை, இஷ்டதேவதை, கிராம தேவதை, ஆச்சாரியர்களை வழிபட்டு 108 அஷ்டோத்திரம் சொல்லி பூஜை செய்து விரதத்தை தொடங்கலாம்.

21 வகையான உணவு பதார்த்தங்கள், இனிப்பு வகைகள், பழ வகைகள் ஆகியவற்றை வைத்து வழிபட வேண்டும். சிலர் 21 என்ற எண்ணிக்கையிலும் பட்சனங்களை நைவேத்யமாக வைத்து வழிபடுவார்கள்.

அதிகபட்சம் 21 பொருட்கள் குறைந்த பட்சம் 5 பொருட்கள் வைத்து வழிபடலாம்.

21 நாட்கள் விரதம் இருப்பவர்கள் ஒரு மஞ்சள் நூலில் தினம் ஒரு முடிச்சாக போட்டு, விரதத்தை நிறைவு செய்த பிறகு அந்த கயிற்றை கையில் கட்டிக் கொள்வார்கள். அல்லது கோவிலில் செலுத்தி விடுவார்கள்.

என்ன பலன் கிடைக்கும்

கேதார கவுரி விரதம் இருந்தால் மாங்கல்ய பலம் அதிகரிக்கும். கணவன்–மனைவி ஒற்றுமை வளரும். வீட்டில் மூன்றாம் நபர்களின் தலையீடு இருக்காது, குடும்ப சுபிட்சம், வாழ்வில் முன்னேற்றம், செல்வ வளம், மணப்பேறு, மங்கள கரமான வாழ்வு என சகல சவுபாக்கி யங்களும் கிடைக்கும்.

திருமண யோகம் தரும் கவுரி பூஜை

திருமணம் ஆக வேண்டிய இளம்பெண்கள் குத்துவிளக்கில் செய்ய வேண்டிய பூஜை 12 நாட்களோ, 24 நாட்களோ அல்லது 45 நாட்களோ செய்வதால் நல்ல பர்த்தாவை அடைந்து ஷேமங்களைப் பெறுவார்கள்.

ஆசமனம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் பிரசன்னவதனம் தியாயேத் சர்வவிக்னோபசாந்தயே

(அக்ஷதையை கையிலெடுத்துக் கொள்ளவும்)

மமோபாத்த சமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபர மேஸ்வர பிரீத்யர்த்தம் ஸீக்ரமேவ விவாஹ ஸித்யர்த்தம் ஸ்ரீகௌரீ பூஜாம் கரிஷ்யே

(உத்தரணி ஜலத்தால் இரு கைகளையும் துடைத்துக் கொள்ளவும்)

சர்வமங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்தஸாதகே சரண்யே திரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே

அஸ்மின் தீயே ஸ்ரீகௌரீம் த்யாயாமி. ஆவாஹயாமி, ஆசனம் சமர்ப்பயாமி ,அர்க்யம் சமர்ப்பயாமி, ஆசமனீயம் சமர்ப்பயாமி, ஸ்நானம் சமர்ப்பயாமி, ஸ்நானானந்தரம் ஆசமனீயம் சமர்ப்பயாமி. வஸ்த்ர யஜ்ஞோபவீத உத்தரீயா பரணார்த்தே இமே அக்ஷதா கந்தான் தாரயாமி, தந்தஸ்யோபரி ஹரித்ரா குங்குமம் சமர்ப்பயாமி. அக்ஷதான் சமர்ப்பயாமி. புஷ்பாணி சமர்ப்பயாமி.

(அர்ச்சனை செய்யவும்)

1 அம்பிகாயை நம:
2 உமாயை நம;
3) பார்வத்யை நம;
4) கவுர்யை நம:
5) ராஜராஜேஸ்வர்யை நம;
6) ராஜ்யதாயின்யை நம:
7) ராஜக்கிருபாயை நம:
8) சிவப்ரியாயை நம:
9) ஸ்ரீ கவுர்யை நம;

காந்தி-கலாம் பிறந்தநாளையொட்டி

நடைபயணம் மேற்கொள்ளும் மதுரை தியாகிக்கு தருமபுரியில் வரவேற்பு

தருமபுரி,அக்.22–

மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர் கருப்பையா (வயது 53). சுதந்திர போராட்ட தியாகியான இவர் தேச நலனுக்காக இதுவரை சுமார் 97 ஆயிரத்து 700 கிலோமீட்டர் மிதிவண்டி பிரசார பயணம் மற்றும் பாத யாத்திரைகள் மேற்கொண்டுள்ளார்.

கடந்த முறை தனது மனைவி சித்ராவுடன் பிரசார யாத்திரை மேற்கொண்டபோது ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் எதிர்பாராத விதமாக அவர் உயிரிழந்தார். ஆந்திர போலீசார் அரசு மரியாதையுடன் சித்ராவின் உடலை அடக்கம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த 15–ந்தேதி பெங்களூருவிலிருந்து தனது பயணத்தை தொடங்கிய கருப்பையா அங்கிருந்து ஓதூர்,கிருஷ்ணகிரி வழியாக இன்று தருமபுரி வந்தார். அவருக்கு இங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இங்கிருந்து புறப்படும் கருப்பையா சேலம்,நாமக்கல் வழியாக புதுச்சேரி செல்கிறார். பின்னர் அங்கிருந்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு சென்று தனது பயணத்தை நிறைவு செய்கிறார்.

சூளகிரி அருகே

விஷம் குடித்து பெண் தற்கொலை

கிருஷ்ணகிரி,அக்.22–

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகேயுள்ள பில்லிகொட்டப்பள்ளி பகுதியை சேர்ந்தவர் சுப்பிரமணி. இவரது மனைவி ஜோதி (வயது 30). கணவன், மனைவி இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

நேற்றும் இதேபோல ஏற்பட்ட தகராறில் மனம் உடைந்த ஜோதி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து அவரது கணவர் சுப்பிரமணி தந்த புகாரின்பேரில் சூளகிரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இராணிப்பேட்டை மாவட்டம்
நெமிலி தேர்வுநிலை பேரூராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நெமிலி தேர்வுநிலை பேரூராட்சியில் **அம்ரூத் 2.O 2022–23ன்** கீழ் **ரூ.108.40 இலட்சம்** மதிப்பீட்டில் நெமிலி காலனி குட்டை மேம்பாடு பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் https://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் : 27.10.2022 காலை 11.00 மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 09.11.2022 மாலை 3.00 மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 09.11.2022 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

ந.க. எண். 70 / 2022
நாள் : 21.10.2022
செ.ம.தொ.இ/4734/ஒப்பந்தப்புள்ளி/2022

செயல் அலுவலர்
நெமிலி தேர்வுநிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

வருவாய் வட்டாட்சியர்
அலுவலகம், கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு. 7318/2022
நாள்: 10.10.2022

முருகன்.C, த/பெ. சின்னப்பன்
பாலகுறி, (Vill.),
பெல்லாரம்பள்ளி (Po.),
கிருஷ்ணகிரி (Tk. & Dt.)
... மனுதாரர்

இடையே

வட்டாட்சியர் அவர்கள்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் முருகன்.C என்கின்ற நான் கடந்த 12.04.1984 அன்று பிறந்தேன். மேற்படியார் பிறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அவர்களிடம் தங்கள் ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

இங்ஙனம்,
வருவாய் வட்டாட்சியர்
அலுவலகம், கிருஷ்ணகிரி.

வருவாய் வட்டாட்சியர்
அலுவலகம், கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு. 7317/2022
நாள்: 10.10.2022

விஜயா.M, க/பெ. முருகன்
பாலகுறி, (Vill.),
பெல்லாரம்பள்ளி (Po.),
கிருஷ்ணகிரி (Tk. & Dt.)
... மனுதாரர்

இடையே

வட்டாட்சியர் அவர்கள்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் விஜயா.M என்கின்ற நான் கடந்த 16.02.1992 அன்று பிறந்தேன். மேற்படியார் பிறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அவர்களிடம் தங்கள் ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

இங்ஙனம்,
வருவாய் வட்டாட்சியர்
அலுவலகம், கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி வருவாய்
கோட்டாட்சியர் சமூகம்
7426/2022

முகமது கலீல், த/பெ. ராஜாக்,
1/264, சோமநாதபுரம்,
குருபரப்பள்ளி, கிருஷ்ணகிரி.
... மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் அம்மா அமீர்பீ என்பவர் கடந்த 19.04.1992 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய்
கோட்டாட்சியர் சமூகம்
2763/2022

பேபி, க/பெ. மகேந்திரன்,
4/146B, மங்கலாபுரம்,
விழாமரத்துப்பட்டி,
உடுமலைப்பேட்டை, திருப்பூர்.
... மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் மகள் ஷில்பா ஸ்ரீ என்பவர் கடந்த 29.03.2011 அன்று மேற்படி முகவரியில் பிறந்தார். பிறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

வட்டாட்சியர் அலுவலகம்,
நல்லம்பள்ளி
ஒ.மு. 750/2019/அ1
நாள்: 08.05.2019

T.சுரேஷ், த/பெ. (லேட்) தங்கதுரை,
மூக்கனஅள்ளி (Vill. & Po.),
நல்லம்பள்ளி (Tk.),
பேடரஅள்ளி (தரப்பு), தருமபுரி (Dt.).
... மனுதாரர்

/இடையே/

வட்டாட்சியர் அவர்கள்,
நல்லம்பள்ளி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் T.சுரேஷ் தனது தாத்தா ராமசாமி என்பவர் கடந்த 01.03.1976 அன்று இறந்துவிட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் தங்கள் ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

இங்ஙனம்,
வட்டாட்சியர் அலுவலகம்,
நல்லம்பள்ளி

Taneja Aerospace and Aviation Limited

Regd. Office : Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, INDIA
Phone : 04347-233508, Fax : 04347-233414, E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

Extract of the Statement of Consolidated Financial Results for the Quarter & Half Year Ended September 30, 2022

(₹ in lakhs, unless otherwise stated)

Sr. No.	Particulars	Quarter ended		Half year ended	Year ended
		Sept 30, 2022	Sept 30, 2021	Sept 30, 2022	March 31, 2022
		(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
1	Total income (Net)	730.03	817.52	1,369.98	3,198.58
2	Net Profit/ (Loss) for the period (before tax, Exceptional items and/or Extraordinary items)	434.97	365.46	772.45	1,281.66
3	Net Profit/ (Loss) for the period before tax (after Exceptional items and/or Extraordinary items)	434.97	365.46	725.45	805.43
4	Net Profit/ (Loss) for the period after tax (after Exceptional items and/or Extraordinary items)	330.59	305.45	513.68	546.67
5	Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) & Other Comprehensive Income (after tax)]	330.59	305.45	513.68	531.48
6	Equity Share Capital	1,246.54	1,246.54	1,246.54	1,246.54
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year				9,616.90
8	Earnings per share (of INR 5/- each)				
	(a) Basic earnings/ (loss) per share (INR)	1.33	1.22	2.06	2.19
	(b) Diluted earnings/ (loss) per share (INR)	1.33	1.22	2.06	2.19

Notes:

1 Additional information on standalone financial results is as follows:

Particulars	Quarter ended Sept 30, 2022	Quarter ended Sept 30, 2021	Half year ended Sept 30, 2022	Year ended March 31, 2022
Revenue from Operations	658.98	798.21	1,275.49	3,119.72
Profit before tax	434.97	365.48	725.45	805.65
Profit after tax	330.59	305.47	513.68	546.89

2 The above is an extract of the detailed format of the Quarter & Half year Financial Results filed with Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on Stock Exchange website (www.bseindia.com) and also on Company's website (www.taal.co.in).

3 The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on October 21, 2022.

Place: Pune
Date: October 21, 2022

For Taneja Aerospace and Aviation Limited
Rakesh Duda
Managing Director